AL12-2-1

# பரலோகம்: எப்படி இருக்கும்? – பரலோகத்தின் எதிர்கால மகிமை –

நிகழ்ச்சி 1

இப்போதும் நாம் பார்ப்பது ஜான் அன்கர்பர்க் நிகழ்ச்சி, பரலோகம் எப்படியிருக்கும்? வரப்போகும் அந்த மகத்தான உலகத்தை பற்றி தேவன் என்ன கூறியுள்ளார்? நீங்கள் டிஸ்னிலேன்டிற்கு போக நினைத்தாலோ ஆஸ்டினில் சறுக்கு விளையாட்டு விளையாட ஆசைப்பட்டாலோ, ஐரோப்பா போக விரும்பினாலோ, கையேடுகளைப் பார்ப்பீர்கள் அல்லது அது எப்படியிருக்கும் என்று அறிய இன்டர்நெட்டை நாடுவீர்கள். அவை, அந்த இடங்கள் குறித்து நம்மை வியக்கவைக்கும். ஆனால் பரலோகம் செல்வதற்கான வழிகாட்டி பைபிள் மட்டுமே. அந்த புதிய பரலோகம் பற்றி அது நமக்கு என்ன சொல்கிறது, ‘‘அது ஒரு புதிய பூமி, தேவனிக் வாக்குத்தத்தம் பெற்றது.’’ பரலோகத்தைப் பற்றி வேதவசனம் சொல்கிறது இதுதான், ‘‘ அது ஒரு புதிய இடம், ஒரு புதிய உலகம், அது ஒருநாளில் உங்கள் இல்லமாக இருக்கும், உங்களுக்கு பரலோகம் பற்றி என்ன தெரியும்? நித்திய ஜீவனுள்ள அந்த இடத்தில் என்ன செய்வது, அங்கு இருந்தபடி என்ன அனுபவங்கள் பெறுவது, என்று இப்போது நீங்கள் யோசிக்கிறீர்களா?

ஹெவன் என்ற புத்தகம் அதிக அளவில் விற்பனையானது, அதின் ஆசிரியர் டாக்டர். ரேன்டி அல்கார்ன் இன்று எங்கள் விருந்தினர். தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ள அந்த அருமையான இடத்தைப் பற்றி அவர் நமக்கு விளக்குவார், நமது எதிர்கால இல்லமான அந்த பரலோகம் பற்றி அறிந்து மகிழ்வார்கள் கிறிஸ்தவர்கள். ஜான் அன்கர்பர்கின் இந்த சிறப்பு நிகழ்ச்சியில் எங்களோடு இணைந்திருங்கள்.

--------------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: எங்கள் நிகழ்ச்சிக்கு வரவேற்கிறோம். பரலோகம் பற்றிய ஒரு பெரிய ஆதாரமாக விளங்குபவர், அடிமரிக்காவில் வசிப்பவர், அவரோடு இப்போது நாங்கள் பேசுகிறோம், அவர்தான் டாக்டர். ரேன்டி அல்கார்ன். இன்று நாம் புதிய எருசலேமைப்பற்றி பேசப்போகிறோம்அங்கே தான் நாம் எல்லாரும் செல்வோம். ‘‘ தேகத்தில் உயிரில்லாமல் இருப்பது, தேவனோடு உயிரோடிருப்பதாகும்.’’ அதுதான் அழகிய நகரம். அந்த நகரம் எவ்வளவு பெரியது? அந்த நகரத்தில் நாம் எதையெல்லாம் பார்க்கப்போகிறோம்? அதைப் பார்ப்போம், ரேன்டி. ஒரு வேதவசனத்தோடு உள்ளார். வெளிப்படுத்தின விசேஷம் 21: 15-16, ‘‘என்னுடனே பேசினவன் நகரத்தையும், அதின் வாசல்களையும் அதின் மதிலையும் அளக்கிறதற்கு ஒரு பொற்கோலைப் பிடித்திருந்தான். அந்த நகரம் சதுரமாயிருந்தது. அவன் அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான். அது பன்னீராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது. அதின் நீளமும், அகலமும், உயரமும் சமமாயிருந்தது.’’ ரேன்டி இந்த வசனங்கள் என்ன சொல்கிறது என்பதை விளக்கமுடியுமா?

டாக்டர். ரேன்டி அல்கார்ன்: சிலர் அதை ஒரு குறியீடு என்று சொல்வார்கள், அது கோம்பு வடிவானது என்று சொல்வார்கள். அது புனிதத்திலும் மிக புனிதமானது. தேவனின் தூய்மையை அது கூறுகிறது, மூன்று விளக்கங்களை அது தருகிறது, பிதா, குமாரன், பரிசுத்த ஆவி. அது எல்லாமே உண்மையாகும். அவை எல்லாமே மனிதனின் அளவு என்று பிறகு அதில் நமக்கு சொல்லப்படுகிறது. எனவே அதை ஒரு மகத்தான இடமாக நாம் கருதவேண்டும். நித்திய ஜீவனில் தேவன் நமக்காக என்ன வைத்திருக்கிறார் என்று அது கூறுகிறது. அது மிகவும் பெரியது, மிகமிகப் பெரியது, நம் வாழ்க்கையில் நாம் அனுபவித்ததைவிட அது உயர்வானது. தேவனின் மக்களுக்கு இந்த வாழ்க்கை ஒரு ஆரம்பம் என்பதை நாம் உணரவேண்டும். உங்களுக்கு இயேசுகிறிஸ்துவோடு தொடர்பு இருந்தால், எதைப்பற்றிய கவலையும் வேண்டாம், எந்த உயரத்தையும் நீங்கள் எட்டிப்பிடிக்கலாம். என்னுடைய இடுப்பில் ஒரு கூடை நிறைய நான் பொருளை வைக்கவேண்டுமா, ஏனென்றால் இது எனக்கு ஒரே சந்தர்ப்பம். அழகு நிறைந்த அந்த உலகில் மகிழ்ச்சியோடு நாம் இருப்பதற்கு நமக்கு கிடைத்த ஒரு மகத்தான் வாய்ப்பு இதுவாகும்.

பரலோகத்தைப் பற்றி நாம் என்ன நினைக்கிறோம் என்பதைப் பற்றி அது நமக்கு கூறுகிறது. பரலோகத்தைப்பற்றி பைபிள் ரீதியான விளக்கம் இல்லை, ஏனென்றால் இதுதான் நமது ஆரம்பம் ஆகும். தேவன் பரலோகத்தை படைத்தார், பூமியையும் அவர் படைத்தார், வெளிப்படுத்தின விசேஷம் 21:1ல் தேவன் அதைப்பற்றி கூறுகிறார். இந்த நேரத்தில் தேவன் புதிய பரலோகத்தையும் புதிய பூமியையும் படைத்துள்ளார். பழமையை அவர் காக்கிறார். அவைகளில் தொடர்புகள் உள்ளது. எனவே நாம் வாழப்போகும் அந்த உலகம் மகத்தானதாக இருக்கும், கிறிஸ்துவின் இரத்தம் பாவங்களிலிருந்து நம்மை மீட்கும். நமது வாழ்வில் நாம் அனுபவித்த எல்லாவற்றிலும் அது மகத்தானது ஆகும்.

அது ஒரு புதிய எருசலேமாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். ஒரு புதிய லாஸ் ஏன்சல்ஸ் இருக்க முடியுமா, புது லண்டன் இருக்குமா? ஒரு புதிய கேட்டநோகா இருக்க முடியுமா? ஏன் இருக்காது? ஒரு நகரம் புதிதாக இருந்தால், மற்ற நகரங்கள் ஏன் புதிதாக இருக்காது? தேவன் நமது கலாச்சாரத்தை புதுப்பிக்கும் பணியை தொடர்ந்து செய்கிறார். அதனால்தான் புதிய இசை உள்ளது, புதிய கலைகளும் உள்ளன, புதிய நாடகங்களும் உள்ளன, புதிய விளையாட்டுகளும் உள்ளன, முழு அனுபவங்களும் நமக்கு உள்ளன. பல இடங்களுக்கும் நம்மால் செல்ல முடியாது. நீங்கள் நயாகரா நீர்வீழ்ச்சிக்கு போயிருக்கிறீர்களா, நான் சென்றிருக்கிறேன், ஆனால் பல இடங்களுக்கு நான் இன்னும் போகவில்லை. நயாகரா நீர்வீழ்ச்சியின் தோற்றமும், மற்ற பெரிய நீர்வீழ்ச்சிகளின் தோற்றமும் , நமது இருதயங்களை எல்லாம் கொள்ளை கொள்வதாகும், அவை தேவனை ஆராதிக்கச் சொல்லும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ஆம், தேவனுடைய சுவிசேஷத்தை பல்வேறு நாடுகளுக்கு கொண்டுசெல்லும் வாய்ப்பை நான் பெற்றேன். முதன்முறையாக சுவிட்சர்லார்ந்து சென்றது என் நினைவில் இருக்கிறது. அந்த மலைகளின் ஊடே ரயில்களில் பயணித்தேன், ந்த மலைப்பாதைகளில் செல்வதை நேசித்தேன். எனக்கு 19 வயது இருக்கும்போது நான் எத்தியோப்பியா சென்றேன், உயரமான மலைகளைப் பார்த்தேன், லை∴ப் பத்திரிக்கையை பார்த்தேன், இந்த உலகில் நாகரீகம் வளராத பத்து பகுதிகளில் அதுவும் ஒன்று என்பதை அறிந்தேன், அங்கே ஒளிகள் எழுவதைப் பார்த்தேன். அங்கே இயற்கையைத் தவிர எதையும் பார்க்கமுடியவில்லை. கென்யா நாட்டின் காடுகளுக்கு சென்றேன், வன விலங்குகளைப் பார்த்தேன், அங்குள்ள அழகை ரசித்தேன், இந்த உலகின் பல்வேறு கடல் பகுதிகளைப் பார்த்தேன், நீங்கள் கேட்கலாம் அவையெல்லாம் பரலோகத்தில் இருக்குமா இருக்காதா என்று, தேவன் அந்த புதிய பரலோகத்தைப் பற்றி என்ன கூறியிருக்கிறார் என்று எங்களுக்கு விளக்கமாக சொல்லங்கள், அந்த புதிய உலகில் நாம் பெறப்போகும் அனுபவம் என்ன?

டாக்டர். ரனேட்டி அல்காரன்: இந்த நம்முடைய வாழ்க்கையிலேயே சொல்லப்பட்டுள்ளது, “பரலோகம் தேவனின் மகிமையை அறிவிக்கிறது என்று. என் சிறு வயதிலிருந்தே வான ஆராய்ச்சி எனக்கு பொழுதுபோக்காகும். நுான் ஒரு கிறிஸ்தவம் இல்லாத இல்லத்தில் வளர்ந்தேன், வெளியே சென்று டெலஸ்கோப்பை பார்ப்பது எனது வழக்கமாகும். பரலோகத்தின் அதிசயங்களை நான் பார்ப்பேன். நட்சத்திர மண்டலத்தில் உள்ள அதிசயங்களை பார்த்தது இப்போது கூட என் நினைவில் உள்ளது. எவ்வளவு ஒளி வருடங்களை கடந்தது என்பதைப் படிப்பேன், லட்சக்கணக்காக நட்சத்திரக் கூட்டங்கள் வானில் இருப்பதை அறிந்தேன். ஆறாவது தரவரிசையில் இருப்பவனைப்போல் வான மண்டலத்தின் அதிசயங்களைக் கண்டு நான் அபுவேன். நுான் எங்கோ வெளியில் இருப்பதாக உணர்வேன், அப்போது அதைப்பற்றி முழுமையாக தெரியாது, நான் சுவிசேஷத்தை கேட்டது இல்லை. சில காலம் கழித்து, உயர்பள்ளிக்குச் சென்றேன், என் வாலிப வயதில், கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைத்தேன். ஒரு நாள் எனது டெலஸ்கோப்பில் பார்த்தேன், பல வருடங்களாக அந்தக் காட்சியை பார்க்கவில்லை, நாட்கள் கழிந்தது, அதை நினைக்கிறேன், ஒரு வெளிச்சம் பார்த்தேன், வானத்தைப் பார்த்தேன், அப்போது நட்சத்திர மண்டலத்தை மீண்டும் பார்த்தேன், மீண்டும் நான் அழுதேன், ஆனால் வேறு ஒரு காரணத்திற்காக அப்படி செய்தேன். அது அவ்வளவு பெரிதாகவும் மகத்தானதாகவும் இருந்ததுதான் நான் அழுததற்கான காரணம், ஆனால் அவை தேவனின் படைப்பு என்பதை இப்போது அறிவேன். வுானமண்டலத்தில் அந்த அதிசயங்களைப் படைத்த தேவனுடன் இப்போது நான் தொடர்பில் உள்ளேன், அதிசயங்கள் பலவற்றை தாங்கி நிற்கும் அந்த வானமண்டலத்தைக் கண்டு வியந்தேன், இப்போது அவரை நான் அறிவேன்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: தேவன் நம்மை மிகவும் நேசிக்கிறார், பல விருப்பு, வெருப்புகள் ஆகியவற்றுடன் அவர் நம்மை ஏற்கனவே படைத்துள்ளார். அதைப்பற்றி பேசுவோம். நம்மில் இருக்கும் தீய எண்ணங்களை அவர் அழிக்கப்போகிறார். அதன் மறு அர்த்தம், நாம் விரும்பும் சில விஷயங்களை நிச்சயமாக அவர் அழிக்கப்போவதில்லை. அவர் அதை உயர்த்தப்போகிறார். நமக்கு எல்லாமே உயர்த்தப்படும் ஏனென்றால் அவர் அன்பிற்குரிய தேவன், சரிதானே.

எனவே தான் அந்தப் புதிய பூமியை அவர் நமக்காக தயார் செய்கிறார். நாம் விரும்புவது அவருக்கு ஏற்கனவே தெரியும். நாம் ஆசைப்படும் விஷயங்களும் அவருக்கு ஏற்கனவே தெரியும். ஏன்? ஏனென்றால் அவற்றை அவர் நமக்கும் தந்துள்ளார், அதனை அவர் நிறைவு செய்வார். அதேசமயம், நாம் கனவு கூட காண முடியாத அளவுக்கு அவை எல்லாம் மகத்தானதாக இருக்கும்.

டாக்டர். ரனேட்டி அல்காரன்: புாஸ்கல், ஒரு மகத்தான கணித மேதை, ஒரு விஞ்ஞானி, எல்லா மனிதரும் மகிழ்ந்திருக்க வேண்டுமென அவர் கூறினார். மகிழ்ச்சியை நாடுவது இயற்கையாகவே நம்மிடம் உள்ளது. அது தேவனிடமிருந்து வருகின்ற ஒன்றாகும். நூம் மகிழ்ச்சியைத் தேடுவது பிரச்சனையல்ல, அந்த மகிழ்ச்சியை தவறான இடங்களில் தேடுவது தான் பிரச்சனை, உடைந்த பாத்திரத்தில் ஒரு துளி தண்ணீர்கூட இருக்காது. அதை விட்டுவிட்டு மகிழ்ச்சி எங்கிருக்குமோ அதை தேட வேண்டும். அது இருப்பது இயேசு கிறிஸ்துவில், தேவனில், அவர்தான் இந்த உலகைப் படைத்தவர். எல்லாவிதமான மகிழ்ச்சிக்கும் ஆதாரம் அவர்தான். மகிழ்ச்சியை மாறுபட்டு தேடுவதும் உள்ளது, அதைப் பற்றி சி.எஸ். லூயில் பேசியுள்ளார், அதை அனுபவப்பூர்வமாக நாம் அறியலாம். ஆந்த மகிழ்ச்சியை எப்படி நாம் அடைய வேண்டுமென்றால், முறையானபடி நாம் அணுகவேண்டும், அதை விக்கிரகமாக மாற்றக் கூடாது, அது எங்கிருந்து வந்தது என்பதை அறியவேண்டும், எனவே அவரை நோக்கி அதை நாம் பார்க்கவேண்டும். நல்லவை எல்லாவற்றிற்கும் தேவனே ஆதாரம், நம்மை மகிழ்விக்கும் எல்லாவற்றிற்குமே தேவன் தான் ஆதாரம். நம் கனவுகளை நிறைவேற்றுபவர் அவர். ஆவரை நாம் பார்க்கவேண்டுமானால், இந்த உலகை படைத்தவருடன் தொடர்புகொள்ள வேண்டும். தனது ஊழியக்காரனை வரவேற்று எஜமான் சொல்லும் வேதவசனங்கள் உள்ளன, “ நல்லதை செய்தாய், என்னுடைய நல்ல விசுவாசமுள்ள ஊழியனே.உன் எஜமானின் மகிழ்ச்சியை நீளும் பெறுவாய்.” இந்த உலகம் படைக்கப்படுவதற்கான மகிழ்ச்சி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த மகிழ்ச்சி நிரந்தரமாக இருப்பது, பிதா குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியில். எனவே தேவன் சொல்கிறார், வேறெங்கும் சென்று மகிழ்ச்சியை தேடாதீர்கள், ஆனால் என்னுடைய மகிழ்ச்சிக்கு நீங்கள் வாருங்கள். என் மகிழ்ச்சி என் படைப்பில் உள்ளது, அது என்னிலும் உள்ளது, நீங்கள் என் பிள்ளைகள் என்பதிலும் அது உள்ளது.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: அந்த புதிய உலகம் நீங்கலாக, அந்த நகரம் பற்றி பேசுங்கள், அந்த நகரம் பற்றிய கதைகள் எவ்வளவு இருக்கும், அது எவ்வளவு பெரியது. அதன் பரிமாணத்தைப் பற்றி ஒரு உதாரணம் தாருங்கள்.

டாக்டர். ரனேட்டி அல்காரன்: அந்த 1400 மைல்களில் பல வடிவங்கள் இருக்கும், நிலைகள் இருக்குழ், அவை 12 அடி உயரமாகும். அவை சுமார் 6 லட்சம் நிலைகளுக்கு ஒப்பானதாகும். அது அந்த மாதிரியாகத்தான் கட்டப்பட்டிருக்கும் என்று நான் உறுதியாக சொல்லவில்லை.சிலர் இப்படியும் சொல்கிறார்கள், “அதன் மேற்பகுதியைப் பார்க்கும்போது, அது ஒரு பிரமிடு போல இருக்கும்.” அது இந்த மாதிரியும் இருக்கலாம், அந்த மாதிரியும் இருக்கலாம், ஆனால் இதை அறிவோம். ஆதன் சதுரவடிவிலான பரப்பளவு நமது புரியும் சக்திக்கு அப்பாற்பட்டது. அதுதான் அந்த புதிய எருசலத்தில் உள்ளது. அந்த புதிய பூமி அங்கே உள்ளது.

அதுமட்டும் அல்ல. அங்கே சூரிய குடும்பமும் உள்ளுது. அது ஒரு புதிய நட்சத்திரக் கூட்டமும் உள்ளது. ஒரு புதிய எருசலேமும் ஒரு புதிய உலகமும் இருக்கும்போது அங்கே ஏன் ஒரு புதிய சூரிய குடும்பமும், ஒரு நட்சத்திரக் கூட்டமும், அநேக புதிய நட்சத்திரங்களும் இருக்கக்கூடாது. ஏனென்றால், தேவன் ஒரு புதிய பரலோகத்தையும், ஒரு புதிய பூமியையும் படைத்துள்ளார் என்று நமக்கு சொல்லப்பட்டுள்ளது. அந்த பரலோகம் எல்லாம் புனிதமான பரலோகம் ஆகும். அது வானம் மட்டுமல்ல, ஒட்டு மொத்த உலகமும் புதிதாக படைக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் அந்த நட்சத்திர மண்டலத்தை நாம் ஆய்வு சொய்வோம். அது நமது விருப்பப்படியே நடக்கும். மனிதர்களாக இருக்கும் நாம் எல்லாரும் 10 சதவிகித மூளையோடு இல்லாமல் 100 சதவிகித மூளையையும் பயன்படுத்தி, விஞ்ஞானப்பூர்வமாக அதில் ஐக்கியமாகி அதனைப் பற்றி ஆராய்வோம். நாம் ஏற்கனவே சந்திரனுக்கு சென்றுள்ளோம், செவ்வாய் கிரகத்துக்கு சென்றுள்ளோம், அதுவே உண்மை, நாம் செய்யவேண்டியது என்ன, பாவம் செய்யாமலும் அதனால் துயரம் மற்றுழ் மரணம் அடையாமலும் இருப்போம், நாம் எல்லாரும் இணைந்து தேவனை மகிமைப்படுத்துவோம், அந்தப் புதிய உலகை ஆராய்வோம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: இது ஒரு அருமையான விஷயம் நண்பர்களே, ஒரு இடைவேளை எடுக்கிறோம், நாங்கள் மீண்டும் இந்நிகழ்ச்சியில் வரும்போது, புதிய நகரமான எருசலேம் பற்றியும், புதிய பூமியைப் பற்றியும், அங்கே எப்படி பயணம் செய்வது என்பது பற்றியும் இன்னும் பல கூடுதலான தகவல்கள் தருவோம். ஒரு கூட்டத்தில் எப்படி நாம் கலந்துகொள்ளப் போகிறோம்? தேவனை எப்படி நாம் ஆராதிக்கப்போகிறோம்? எங்களோடு இருங்கள், மீண்டும் வருவோம்.

----------------

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நாங்கள் வந்துவிட்டோம். டாக்டர் ரேன்டி அல்கார்னுடன் பரலோகத்தை பற்றி நாம் பேசினோம். இந்த விஷயத்தில், நமது நாட்டில் அவர் ஒரு சிறந்த ஆதாரமாக உள்ளார். ரேன்டி, பரலோகத்தில் தங்கமயமாய் விளங்கும் தெருக்கள் பற்றி நான் பேச விரும்புகிறேன். உண்மையிலே புதிய எருசலத்தில் தங்கமயமான தெருக்கள் உள்ளனவா?

டாக்டர். ரனேடி அல்கார்ன்: அப்படி இருப்பதாக கூறப்பட்டுள்ளது, சிலர் கூறுகிறார்கள், "அது கணக்கு ரீதியான ஒரு பேச்சு." தங்கத்தின் மதிப்பு என்ன என்பது உங்களுக்கு தெரியாதா? எனவே அவை தெருக்களில் இருக்க முடியுமா, அதன் மீது மக்கள் நடந்து போவார்களா?
அது அர்த்தமில்லாத ஒரு உதாரணமாகும். அது நித்திய ஜீவனில் நாம் இருக்கப்போகும் நம்பிக்கையை சீர்குலைப்பதாகும். ஒருவேளை அதில் சில உண்மைகள் இருக்கலாம், ஆனால் அந்த இடத்தில் வைத்திருக்கும் மதிப்புக்கு எந்த அளவுகோலும் கிடையாது என்று தான் நான் எண்ணுகிறேன். ஆவை மேன்மையான கற்கள், 12 – மேன்மையான கற்கள், அந்த புதிய ஜெருசலத்தின் மதில் சுவர்களில் அவை வைக்கப்பட்டிருப்பதாக நமக்கு சொல்லப்பட்டுள்ளது. அந்த அழகான சூழ்நிலையில் நாம் எல்லாரும் இருப்போம் என்று நான் நினைக்கிறேன்.

தேவன் அழகானவர். அங்கு நாம் இருப்பதற்கு நாணய மதிப்பு வேண்டுமா என்று நான் கேட்கிறேன்? இல்லை, அதற்கு நாணய மதிப்பு உண்டா?இருக்காது. முக்கியமாக, நாம் புதிய ஜெருசலத்தில் பார்க்கப்போவது அதுதான் என்று நினைக்கிறேன். அங்கே கனிம அதிசயங்கள் உள்ளன, அங்கே இயற்கையாக விளையும் காய்கறிகளும், மரங்களும், பழங்களும் உள்ளன. மலைகள் உள்ளன, விலங்குகள் உள்ளன. அங்கு மகிழ்ச்சி நிறைந்துள்ளது. அங்குள்ள விலங்குகளில் மீன் தின்று வாழும் விலங்கும் இருக்கலாம். சாபமான இந்த வாழ்விலும், ஓட்டர்ஸ் விலங்குகள் பல மணிநேரங்கள் விளையாடுவதை நாம் பார்க்கலாம், அழகிய அந்த விலங்குகள் உண்டு, விளையாடும், அது நல்லதொரு வாழ்க்கை வாழும் என்று நான் நினைக்கிறேன். அப்படிபட்ட வேடிக்கைகள் அங்கு நிறைந்து இருக்கும்.

ரோமர் 1 நமக்கு சொல்வது, " தேவன் தமது படைப்பில் நற்பண்புகளை தெரிவித்துள்ளார்." ஓட்டர் விலங்கு விளையாடி மகிழ்வதன் அர்த்தம் என்னவென்றால், தேவன் மகிழ்ச்சியை விரும்பும் தேவன் என்பதாகும். இது சாத்தானின் மூலம் கிடைக்காது. ஓட்டர் விலங்கை சாத்தான் படைத்தான் என்று நாம் நினைக்க முடியுமா? நிச்சயமாக அப்படியில்லை. மறுவார்த்தையில் சொன்னால் அதில் நாம் தேவனைப் பார்க்கவேண்டும். எனவே, அங்கு மகிழத்தப்பவை உள்ளன. என்னுடைய வேட்டை நாயை பொறுத்தவரை, அவளுடைய காதை நாம் தடவ வேண்டும் என விரும்பும், அதில் அவளுக்கு அலாதி பிரியம், அதனுடைய கண்களை நான் பார்ப்பேன், அதில் ஆச்சரியம் தெரியும், தேவன் படைத்த அந்த ஆச்சரியத்தையே அவளிடம் நான் காண்பேன். முக்கியத்துவம் இல்லாத சிறிய விஷயங்களோடு அந்த உலகம் இல்லை, அவர் எல்லாவற்றையும் காப்பவர், அவர் ஆவிக்குரிய விஷயங்களை மட்டுமே காத்திடுவார். தேவன் படைப்புகள் தான் எல்லாமே, உடல் மற்றும் ஆவி, நாம் அவற்றை துயரமின்றி மகிழமுடியும், அதன் மூலம் நித்திய ஜீவனை அவர் மகிமையில் பெறமுடியும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: இந்த ஒரு விஷயத்தோடுகூட, பிற விஷயங்களை நாம் ஆராதிப்பதைப் பற்றியும் பேசிடுவோம். திருச்சபையோடு ஆராதனை முடிந்துவிடுவதாக நாம் நினைக்கிறோம். உண்மை என்னவென்றால் நாம் பேஸ்பால் விளையாடினாலோ, பிற விளையாட்டு விளையாடினாலோ, அது ஆராதனை ஆகாது. எனவே விளையாட்டு என்பது ஆராதனை அல்ல. அது வேத சம்பந்தமானதும் அல்ல, அதை ஏற்போம்.

டாக்டர். ரனேடி அல்கார்ன்: ஒன்று கொரிந்தியர் 10:31 கூறுகிறது, "நீங்கள் புசித்தாலும், குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்." அதன் அர்த்தம், நான் திருச்சபைக்கு செல்வது தேவனை மகிமைப்படுத்துவதற்காக அல்ல. நான் பைபிள் படிப்பது தேவனை மகிமைப்படுத்துவதற்காக அல்ல. நான் பாடல் பாடுவது தேவனை மகிமைப்படுத்த அல்ல. ஜெபிப்பதும் அப்படிதான். புசிப்பதும், குடிப்பதையும் விட எளிமையானது என்ன? நீங்கள் காலையில் எழுந்தவுடன் நடக்கிறீர்கள், இரவில் படுத்து உறங்குகிறீர்கள். வாழ்வு நிறைவானது அந்த ஒரு வாழ்க்கை முழுவதும் தேவனை மகிமைப்படுத்தி போற்ற வேண்டும். மதநூல் சம்பந்தமான ஒரு பேராசிரியர் எனக்கு ஒரு சவால் விடுத்தார், புதிய பூமியில் தேவனை மகிமைப்படுத்த ஒருவேளை நாம் சைகிள் ஓட்டலாம் என்று நான் கூறினேன். அவர் சொன்னார், "ரேன்டி, நாம் தேவைனக் காணும் பட்சத்தில் சைகிளைப் பற்றி ஏன் கவலைப்படவேண்டும்," என்றார். நான் சொன்னேன், " நாம் சைகிளையும், விக்கிரகங்களையும் உருவாக்கவில்லை, தேவனுக்கு பதிலாக நாம் அவைகளை

ஆராதிப்பதற்காக, அதற்கு மாறாக, நாம் சைகிளில் மகிழ்சதைப் போல தேவனை ஆராதிக்கிறோம்.'' இப்போது கூட போர்ட்லான்டில் உள்ள ஸ்பிரிங் வாட்டர் காரிடார் டியெலுக்கு, மைல் கணக்கில் சைகிளில் சென்று, நான் தேவனை ஆராதிக்கிறேன். சபிக்கப்பட்ட இந்த உலகில் பாவம் செய்த ஒருவன் என்ற முறையிலும் சைகிளில் சென்று நான் தேவனை ஆராதிக்கிறேன். தேவைன சைகிளில் சென்று ஆராதிப்பது தவறு என்றால், அவற்றை நாம் ஓட்டவேண்டிய தேவையில்லை.

நித்திய ஜீவனில் எல்லா வழிகளிலும் நாம் தேவனை ஆராதிப்போம். அவரை மண்டியிட்டு பார்த்தபடி ஆராதிக்கும் ஒரு காலமும் நமக்கு வரும். அது உண்மை. அவரது ஊழியர்கள் அவருக்கு ஊழியம் செய்வதாகவும் சொல்லப்பட்டுள்ளது. அதன் அர்த்தம், நாம் பிறகாரியங்களை செய்வோம். பிற இடங்களுக்குப் போவோம் என்பதாகும். ஆனாலும் நாம் தேுவனிடமிருந்து பிரியமாட்டோம். எந்தவொரு சூழ்நிலையிலும், நம் வாழ்வில் தேவனின் பிரசன்னத்தை நாம் மறக்கமாட்டோம். இப்போதும் அவர் எங்கும் நிறைந்துள்ளார், ஆனால் அதை நாம் பார்ப்பதில்லை. அதை நாம் பார்க்காமல் போகமாட்டோம். நமக்கு அளிக்கப்படும் ஒவ்டிவாரு ஈவிலும் அவரை நாம் காணலாம்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: அதைப் பார்ப்பதற்கான ஆற்றலை தேவன் நமக்கு அளிப்பாராக, அவர் வழங்கியுள்ளதை நாம் காணச் செய்வாராக, அவர் நம்மை வழி நடத்தியதையும் பாதுகாத்ததையும் அறியச் செய்வாரா? அது நிகழ்வதை நாம் எப்படி பார்ப்பது?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: தேவன் அளவிலும், நேரத்திலும் கட்டுப்பட்டவர் அல்ல, நேரத்தையும், அண்டைத்தையும் மீறி அவர் உள்ளார். அண்டமும், நேரமும் அவர் படைத்தவை, நிரந்தரமில்லா ஜீவன்களுக்காக அவை படைக்கப்பட்டவை. சர்வ வல்லவரும், அற்புதங்களும் நிகழ்த்துபவருமான தேவன் விரும்பினால் புதிய பூமியில் வாழ்வதற்காக அவர் நம்மை எப்போதும் அழைத்துச் செல்லமுடியும். அவர் விரும்பினால் ஒரு வரலாற்றை நாம் படிப்பதைப்போல என்ன நடந்தது என்பதை ஒரு வீடியோ பதிவின் மூலம் நம்மை அவரால் காணவைக்க முடியும். அவர் விரும்பினால், நம்மை மாயமாக அழைத்து சென்று, இயேசு தனது சீஷர்களிடம் என்ன பேசினார் என்பதைக் காட்ட முடியும். அதை எப்போதாவது விரும்பியிருக்கிறீர்களா, இயேசுவின் மலைப்பிரசங்கத்தை கேட்கவேண்டும் என்று நாம் விரும்பியிருக்கிறேன். அந்த மலையில் அவர் பிரசங்கம் செய்யும்போது ஒரு நாள் நான் இருக்கக்கூடும். ஏனென்றால் தேவன் அதை மீண்டும் நிகழ்த்துவார். எபேசியர் 2:7 வேத வசனத்தை நான் நினைத்துப்பார்க்கிறேன், இந்த மாதிரி நிகழ்வுகள் நடக்கும் என்று அது கூறுகிறது, ஏனென்றால் வருங்காலத்தில் தேவன் அதை நமக்கு வெளிப்படுத்துவார் என்றும் அது கூறுகிறது, ''கிறிஸ்து இயேசுவுக்குள் அவரை நம்மோடுகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்.'' வருங்காலத்தில் அந்த கிருபையும் அன்பும் நம்மை வந்து சேரும், கடந்த காலத்திலேயே அது நமக்குள் இருந்ததாக நான் நினைக்கிறேன். எனவே, நம் வாழ்வை பின்னோக்கி அவர் நகர்த்துவார். ஒரு பயங்கரமான விபத்தை பின்னோக்கி பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பை அவர் தருவார், அதன் விளைவு எப்படியாகவும் இருக்கலாம், ஆனால் அவர் கண்கள் மூலம் அதை நம்மால் காண முடியும், பிறகு அிப்படி சொல்வோம், ''தேவனே, தாங்கள் அதை செய்தீர், தேவனை நேசிக்கிறவர்கள், அவரை நாடிச் செல்பவர்கள் எல்லா நன்மையும் பெற முடியும், அதைத்தான் நீர் எனது வாழ்வில் செய்தீர்.'' ஆதை நாம் விசுவாசித்தால் ஏற்க முடியும். ஒரு நாளில் நமது விசுவாசம் உண்மையாகும். அதே சமயம், நாம் பின்னோக்கிப் பார்ப்போம், நமது வாழ்வில் தேவன் செய்த கிருபையையும், அன்பையும் உணர்வோம், அதுதான் உண்மையாக இருக்கும்.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: நாம் நேசித்த ஒருவர் கிறிஸ்துவை விசுவாசிக்காமல் நரகத்திற்கு சென்றால், நாம் பரலோகத்தில் துக்கமாக இருப்போமா, ஏனென்றால் அவர் நரகத்தில் உள்ளாரே?

டாக்டர். ரனேட்டி அல்கார்ன்: இந்தக் கேள்வியை அநேகம் மக்கள் கேட்டுள்ளார்கள், நான் கிறிஸ்தவர் அல்லாத ஒரு இல்லத்தில் வளர்ந்தேன். அந்தக் கேள்வி பற்றிய விடை எனக்கு தெரியும். தேவனை அறியாதபோதும் என்னை நேசிக்கும் ஒருவர் உள்ளார், தேவளை அறியாத அநேக நண்பர்கள் எனக்கு உள்ளனர். அதன் பின்னால் உள்ள அர்த்தம் எனக்குப் புரியும், அதை எல்லோரும் புரிந்துகொள்வது கடினம். ஆனாலும் அதை அறிவோம். வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் பார்கக்லாம், பூமியில் உள்ள தீமைகளின் நடுவேயும், தேவனின் நியாயத்தீர்ப்பினால், தேவதூதர்களும், மக்களும் பரலோகத்தில் மகிழ்ச்சியோடு உள்ளனர், தேவன் அழிவையும், மரணத்தையும் தந்தாலும், மக்கள் பரலோகத்தில் மகிழ்ச்சியோடு உள்ளனர், அதற்கு காரணம் தேவனின் புனிதம் அவர்களோடு உள்ளது. அந்த நிலை நாம் நேசித்தவர்களுக்கு வரும்போது, தேவன் அவர்களை மிகவும் நேசித்தார், அவர்களுக்காக சிலுவையில் மரித்தார் என்பதை நாம் அறிய வேண்டும். ஆனால், ஒருபோதும் பரலோகத்தை நரகம் வெற்றி கொள்ளாது. பரலோகத்தை வெல்ல நரகத்தால் முடியாது. நரகம் என்ன

காரணத்தினால், பரலோகத்தில் உள்ள மகிழ்ச்சி குறைந்துவிடாது, நான் நினைப்பது என்னவென்றால், வருங்காலத்தில் மன்னிக்கப்பட்ட மக்களின் இடமாக இந்த உலகம் விளங்கும் என்பது என் தனிப்பட்ட கருத்து, அதிலே எந்த ஆச்சரியமும் நமக்கு வேண்டாம். அதனால் நாம் எதையும் இழக்கப்போவதில்லை, அது ஒருபோதும் நமது மகிழ்ச்சியை குறைத்துவிடாது.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: 3 விறாடிகளில் கிறிஸ்துவைப்பிற மக்களால் எப்படி தெரிந்துகொள்ள முடியும், ஆனால் நாம் பரலோகத்திற்கு செல்வோம் என்ற உண்மை அவர்களுக்கு தெரியுமா?

டாக்டர். ரனேட்டி அலக்காரன்: இயேசு யார் எனபதையும், உங்களுக்குள் அவர் யார் என்பதையும் அறிய வேண்டும். அவரை அறியாதவர்களுக்கு சொல்லப்பட்டுள்ளது, ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை அன்றி ஒருவரும் பிதாவினிடத்தில் செல்ல முடியாது.'' தேவனிடம் தொடர்பு கொள்வதற்கு, இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்க வேண்டும். அவர் நமது பாவங்களுக்கு விலை கொடுத்துள்ளதை அறியவேண்டும். தேவனிடம் நாம் தொடர்புகொள்வதற்கு அதுதான் ஒரே வழி.

டாக்டர். ஜான் அன்கர்பர்க்: ரேன்டி ஒரு அருமையான எழுத்தாளர், அவர் எழுத்தின் மூலம் உங்கள் பிள்ளைகளுக்கு பரலோகம் பற்றி கூறலாம், உங்கள் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லும் ஒரு நிகழ்ச்சியை நடத்தப்போகிறோம். அவர்கள் பரலோகம் பற்றி என்ன மாதிரி கேள்வி கேட்பார்கள்? பரலோகம் பற்றிய கேள்விகள் இநேக நேரங்களில் வந்துள்ளன, பொதுவாக முதியவர்களும், கிறிஸ்தவ மக்களும் அதற்கு தவறான விடைகளைத் தருகிறார்கள் என்பதே உண்மை. குழந்தைகள் கேட்கும் பெரிய கேள்விகளுக்கு நாங்கள் விடை தருவோம். ''தேவன் சொல்கிறார்'' என்பதை அவர்களுக்கு புரிய வைக்கவேண்டும் என்று ரேன்டியை கேட்கிறோம். எங்களோடு நீங்கள் இணைந்திருங்கள்.

எங்களுடைய மற்ற டிவி நிகழ்சிகளை பார்க்க எங்களுடைய ஜான் அன்கேர்பெர்க் ஷோ ஆப்பை இலவசமாக பதிவிறக்கம் செய்திடுங்கள்.

"இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கான ஜெபம்" JA show.org